ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எட்டுத்தொகையில் அறம்

**மா மகேஸ்வரி,**
**தமிழ்த்துறை,ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்**
**maheswarim1992@gmail.com**

100

**அறம்:**

மனிதன் தனியானவன்அல்லன். அவன் சமூகக்கடலின் ஒருதுளி . அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாவற்றோடும்எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்து கொள்கிறானோஅவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது . இந்தமகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுவிச் செல்லும் பொதுவிதியானஅறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

**சாளரத்தின்கதவுகள், சட்டம்:**
**காற்றுடைக்கும்,**
**தெருப்புழுதிவந்தொட்டும்.**
**கரையான் மண் வீடு கட்டும்.**
**அன்று துடைத்தேன்,சாயம் அடித்தேன்,**
**புதுக்கொக்கிபொருத்தினேன்.**
**காலக்கழுதைகட்டெறும்பானஇன்றும்**
**கையிலேவாளித்தண்ணீர், சாயக்குவளை,**
**கந்தைத்துணி, கட்டைத்துரிகை:**
**அறப்பணிஓய்வதில்லை**
**ஓய்ந்திடில்உலகமில்லை!**

**- தி.சொ.வேணுகோபாலன்**அவர்கள் தனக்கானப பணிகளோஉலகிற்கானபணிகளோஅறம் சார்ந்து வளர வேண்டும் என்கிறார்.

**எட்டுத்தொகை:**

தாம்சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது. சிந்தித்து அறிந்து கொள்ளும் அறம் இரண்டாம்தரமானது. இயல்பாக அறியும் அறம் முதல்தரமானது .அத்தகையமுதல் தரமான இலக்கியங்களேசங்க இலக்கியங்கள்எனலாம். அவற்றுள்தொகுக்கப்பெற்ற தொகைநூல்களாவன,

**நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும்கலியோடுஅகம்புறம்என்று**
**இத்திறத்த எட்டுத்தொகை.**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை , அகநானூறு ஆகியஐந்தும்அகப்பொருளாகியஇன்பத்துறைபற்றிய ஒழுக்க நிகழ்ச்சிகளைஅழகுற எடுத்துக் கூறுவன. புறநானூறு, பதிற்றுப்பத்துஆகிய இரண்டும்புறப்பொருள்பற்றியசெய்திகளைநன்குபுலப்படுத்துவன .அகம், புறம்இரண்டையும்எடுத்துப்பேசுவதுபரிபாடல்.இவைஅனைத்தும்அன்பையும்அதன்வழியேஅறத்தையும்எடுத்துரைக்கிறது.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும்சமூக உறுப்பினனாகவும்இயங்குவதற்கும்அவனது பண்பு நலனைஉருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள்எனலாம்.

**நற்றினை:**

**முந்தைஇருந்து நட்டோர்கொடுப்பின்**



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**நஞ்சம்உண்பர்நனிநாகரிகர் (355, 6-7 ).**

அன்றாட வாழ்க்கையில் 'நாகரிகம்' என்ற சொல் பல நிலையில், பல பொருள்களில்பயன்படுத்தப்படுகிறது. ஒருவர் உணவு அருந்திக்கொண்டிருக்கும் பொழுது இன்னொருவர் வந்தால், அவரையும் உணவுக்கு அழைக்க வேண்டும் என்பது நாகரிகமாகக் கருதப்படுகிறது .எனவே, நமது பண்பாட்டுக்கூறாகியநாகரிகம்கொண்டோர்சான்றோர்கள். அத்தகையசான்றோர்களையேவள்ளுவர், நட்பு என்ற முறையில் நஞ்சைக் கொடுத்தாலும்உண்பார்கள் என்று குறிப்பிடுகிறார்.

**பெயக்கண்டும்அமைவர்நெஞ்சுண்டமைவர்நயத்தக்க**
**நாகரிகம்வேண்டுபவர். ( குறள் 580)**

என்றபாடலில்கருத்தைமுழுவதும்ஏற்றுள்ளார்வள்ளுவர்.

**"ஆழி மருங்கின்அலவன்ஓம்பி**

**வளவன்வள்பு ஆய்ந்து ஊர" ( 11, 7-8)**

தாம் ஊர்ந்து வருகின்றதேரின்ஆழியிடத்துப்படாதவாறுநண்டுகள்விலக்கிப் பாகன் வாரைப் பிடித்து ஆராய்ந்து செலுத்துமாறுஅரசன் கூறுகிறார்.

**"மரம் சா மருந்தும்கொள்ளார்** "மனிதநேயமானதுஉயர்திணை மட்டுமல்லாது அஃறிணைஉயிர்களிடத்தும்காணப்படுகின்றன .தலைவிக்குகளாக்காய் மரம் அக்கா ஆனநிகழ்வும் சங்க இலக்கியத்தில் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

**குறுந்தொகை:**

**வினையேஆடவர்க்கு உயிர் வானுதல்**
**மனையுறைமகளிருக்குஆடவர் உயிர்.**

வீட்டில்அறம்இல்லையேல்வீதியில்இருக்காது . இல்வாழ்க்கை வாழ்கின்றவன் என்பவன், தன்னலம் துறந்து பிறர்நலம் பேணி வாழ்கின்றவன்; தன்னுடைய மனைவி, பிள்ளைகள் , பெற்றோர், சுற்றத்தார், வறியவர்கள், மூதாதையர், சமுதாயத்தில்ஆதரவற்றவர்கள், துறவு மேற்கொண்டவர்கள்அனைவருக்கும் உதவி செய்து வாழ்பவன்.

இதனை, வள்ளுவரும் "அறனெனப்பட்டதேஇல்வாழ்கை"என்கிறார். வாழ்க்கைத்துணையோடுஅறநெறிகளில் இருந்து பிழையாமல் இல்வாழ்க்கை நடத்துபவரேஇல்வாழ்க்கையால் வரும் பயனைஅடையக்கூடியவர்கள் .

இங்குபாலைபாடியபெருங்கடுக்கோ,

**"உள்ளதுசிதைப்போர்உளரெனப்படார்**
**இல்லோர்வாழ்க்கைஇரவினும்இளிவெனச்**
**சொல்லியவன்மை ... …………………… (283, 1-3)**

தம்முடையமுன்னோரால்தேடிவைக்கப்பெற்று , தாமாகஈட்டியபொருள்இல்லாதார் , முந்தையோர்பொருளின்பயனைத்துய்த்துவாழ்தல்என்பதுஇரத்தலைக்காட்டிலும்இழிவுஉடையது . இங்குஆண்மையின்அறத்தன்மைசுட்டிக்காட்டும்திறன்வியக்கத்தக்கது .

**"நில்லாமையேநிலையிற்றாகலின்**

**நல்லிசைவேட்டநயனுடைநெஞ்சிற்**

**கடப்பாட்டாளனுடைப்பொருள்போலத்"(143, 3-5)**

**கடப்பாட்டாளன்–**கடமையைஅறிந்து செய்பவன் ,ஒப்புரவாளன்.உலகத்திலுள்ள பொருள்கள் நிலையற்றவை. புகழ் ஒன்றே நிலையுடையதாகலின்அதனைக்கடப்பாட்டாளன்விரும்புவர் . தாம் பெற்ற பொருளால்பிறருக்கு ஈந்து புகழ் படைக்க விரும்புவோன் . இரப்போர்க்குமுற்றும் வழங்கிவிடுவர்.

**ஐங்குறுநூறு:**

ஐங்குறுநூற்றுப்பாடல்கள்தொடங்கும்நிலையில்மன்னனைவாழ்த்துகின்றன .வயலும்வயல் சார்ந்த நிலமும்மருதத்திணையின்முதற்பொருளாகும்.
உயிர்களின்அழிபசிதீர்த்தலாகியபேரறத்திற்குமுக்கியத்துவம்அறிந்தேமுறைவைப்பில்முதலிடம்பெறுகிறது.

**வாழி அதன்! வாழி அபினி!**
**நெல்பலபொலிகபொன்பெரிது சிறக்க**
**விளைய வயலே! வருக இரவலர்**
**அறம்நனிசிறக்க அல்லது கெடுக.**

ஒரு நாட்டின் மன்னன் , மக்கள்,நாட்டின் வளத்தை கூறி அறத்தைமிகுவிக்கும்சிறந்தசெயலாகஅறம்கூறப்பட்டுள்ளது. அந்த அறம் அல்லாத தீமைகள் ஒழிந்து போகவேண்டுமெனவாழ்த்துகிறார்ஓரம்போகியார் .

**கலித்தொகை:**

அறக்கருத்துக்களைஅதிகம்கொண்டதுபாலைக்கலிஆகும் . இவ்விலக்கியம் சிறுகதைபோன்ற அமைப்பிலும்எந்த நாட்டு இனத்திற்கும்பொதுவானஉண்மைகளையும்பெற்றுதிகழ்கிறது .இவை சிறந்த வாழ்க்கை விழுமியங்களைகொண்டுள்ளது. அவற்றுள் ,

1. செல்வம் நிலையில்லாப் பொருள் (8).
2. வறியவனது இளமை சிறப்பைஅடையாது , கொடைக்குணம்இல்லாதவனுடையசெல்வம் அவனைச்சேர்ந்தவரைப்பாதுகாவாது (10).
3. யாவருக்கும் தீமை செய்பவன் இறுதியில் உறவினர் இன்றி , நண்பர் இன்றிக் கெட்டு ஒழிவான் (10).
4. நேர்மையற்ற முறையில் பொருள் தேடுவோர்க்கு
5. நிலையாமை உணர்பவர்கொடைபுரிவர் (32).
6. பொருள் இல்லாதவர் நிகழ்த்தும் இல்லறம் இன்பத்தைத்தராது (148).

**அகநானூறு :**

அகநானூறுப்பாடல்கள் இன்பம் பற்றிய ஆயினும் , தமிழரின்பண்பாடுமற்றும் அறத்தைவிளக்கும்உயர்ந்த கருத்துக்களைஆங்காங்குக்கொண்டுள்ளன. அவற்றுள் :

**கழியக்காதலர் ஆயினும் சான்றோர்,**
**பழியொடுவரூஉம்இன்பம் வெஃகார் (112).**

காதலில்அறத்தொடுஇருந்ததை ,சான்றோர்மிக்க காதல் கொண்டவராயினும்பழியுடன்கூடிவரும்இன்பத்தினைவிரும்பாதவர்களாகஇருந்தனர், பாவநெறியிற்செல்லாத வாழ்க்கையும் , பிறன் மனை வாயிலில் சென்று நில்லாதமேம்பாடும்ஆகிய இரண்டும்பொருளினால்ஆகும் (155).

**மனைவயின் இருப்பவர் மன்னேதுனைதந்து**
**இரப்போர்ஏந்து கை நிறையபுரப்போர்**
**புலம்புஇல்உள்ளமொடுபுதுவதந்து உவக்கும்**
**அரும்பொருள்வேட்டம் எண்ணி.......... (389, 10-13).**

இரப்பவரது ஏந்தும் கைகள்நிறையும்படி மகிழ்ச்சியோடு அதுவும் விரைந்து வந்து புதிய பொருள்களைத் தந்து மகிழ்வதற்கே அரிய செல்வத்தை ஈட்ட வேண்டும் என்று எண்ணிப் பொருள்ஈட்டசெல்லுதல் வேண்டும் என்ற அறத்தைவலியுறுத்துகிறது.

**புறநானூறு :**

புறநானூறுமுழுவதும்அறங்கள்கொட்டிக்கிடக்கின்றன. புறநானூறு கூறும் கருத்துக்கள் குறள் வெண்பாவைப்போல்இரண்டுவரியாகவுள்ளன.இப்புறநானூற்றுவரிகள்அறக்கருத்துக்களைத்தன்னகத்தே கொண்ட பொன்வரிகள்.

**யாதும் ஊரேயாவரும் கேளிர்**
**தீதும்நன்றும்பிறர்தரவாரார்......**
**பெரியோரைவியத்தலும்இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும்இலமே.**

**- கணியன்பூங்குன்றன்**

**நல்லது செய்தல் ஆற்றீர்ஆயினும்**
**அல்லது செய்தல்ஓம்புமின்**

**- நரிவெரூஉத்தலையார்**

**நெல்லும்உயிரன்றேநீரும்உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தேமலர்தலையுலகம்**

**- மோசிகீரனார்**

**இம்மைச்செய்தது மறுமைக்குஆம்எனும்**
**அறவிலைவணிகன்ஆய்அலன்.**

**- முடமோசியார்**

**உற்றுழிஉதவியும், உறுபொருள்கொடுத்தும்**
**பிற்றைநிலைமுனியாது , கற்றல்நன்றே!**

**- ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே**

**- குடபுலவியனார்**

தான் மட்டும் வாழ்ந்தால் போதும் . பிறன் எக்கேடும்கெடுகஎன்று எண்ணாதுதம் போன்றவரைஆற்றுப்படுத்தியது, அவரிடமிருந்து உயர்ந்த பண்பாட்டைவிளக்குகிறது. இப்பண்பாட்டின்அடியாக தோன்றியவை **புலவர் ஆற்றுப்படை (48), விறலிஆற்றுப்படை(105),பாணாற்றுப்படை(143)**முதலியஇலக்கியங்களாவன,

**கூத்தரும்பாணரும்பொருநரும்விறலியும்**
**ஆற்றிடைக்காட்சி உறழத்தோன்றி**
**பெற்ற பெருவளம்பெறாஅர்க்குசெறிஅறிவுறீச்**
**சென்றுபயன்எதிராச்சொன்னப்பக்கமும்**

**(தொல். பொருள்,-88)**

**பதிற்றுப்பத்து :**

இமயவரம்பன்முதல்எல்லாச்சேரமன்னரும்முத்தமிழ்வாணரைப்பலவகைப்பட்டபரிசல்களைநல்கிமகிழ்வித்தனர். இவர்கள்'பாடினிவேந்து''பரிசில் செல்வன் 'என்று தனித்தனியே பாராட்டப்பெற்றனர் . புலவர்களுடன்இருந்து உண்டு மகிழ்ந்தனர் . இரவலர் பசியோடு தம்மை நோக்கியபார்வையைக்கண்டு அஞ்சினர். போர்களில்கிடைத்த பொருள்களைஇம்முத்தமிழ்வாணர்க்குஅளித்து மகிழ்ந்தனர்.

**செல்லக் கடுங்கோவாழியாதன்** , கொடுமணல்என்னும் ஊரில் கிடைத்த விலையுயர்ந்த அணிகளையும்முத்துக்களையும்பரிசிலருக்கு வழங்கி மகிழ்ந்தவன். இரவலர்க்கு பொருள் கொடுப்பதற்குவருந்தாதவன். இதனை,

**ஈத்ததுஇரங்கான்ஈஈத்தொறும்மகிழான்**
**ஈத்தொறுமாவள்ளியன்**
**மாரி பொய்க்குவது ஆயினும்**



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

**சேரலாதன்பொய்யலன்நசையே.**

அரசன்பெருமையைக்கூறுவதுமரபு. இங்கு அரசன் பெருமையால் பாணன் கொடைத்திறனும்வெளிப்படுகிறது. யானைக்கோட்டிடைவைத்த கவளம் போல்அரசன் கொடைஉறுதி என்பதால்பாணன்'உண்மின்கள்ளே, அடுமின்சோறே' என நலிந்தோரைப் பார்த்துக் கூறுகின்றான்.

சேர மன்னர் காட்டில் வாழ்ந்த முனிவர்களுக்குவசதிகள் செய்து கொடுத்தனர்.நீர்நிலைகளளைப்பெருக்கினர்.

நாட்டுவருவாயைஅறம் முதலிய பல துறைகளுக்கு தனித்தனியே பிரித்துச்செலவிட்டனர்.

நெடுஞ்சாலைகளில்இனிய பழம் தரும் மரங்களைநட்டு வளர்த்தனர்.

**பரிபாடல்:**

தெய்வ வணக்கத்திற்குஏற்றவகையாகப்பரிபாடல்கள் அமைந்துள்ளன.திருமாலிடம் ,

**தீயினுள்தேறல் நீ! பூவினுள்நாற்றம் நீ!**
**கல்லினுள்மணியும்நீ! சொல்லினுள்வாய்மை நீ!**
**அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள்மைந்துநீ!...**

இதுபோல்முருகனிடம் கடுவன்இளவெயினனார்

**'யாஅம்இரப்பவை**
**பொருளும் பொன்னும்போகமும்அல்ல:நின்பால்**
**அருளும் அன்பும் அறனும்மூன்றும்' (5)**

யாம் வேண்டுபவைபொருளும் பொன்னும்போகமும்அல்ல . எமக்கு வீடு பயக்கும் நின் அருளும் , அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும், அவ்விரண்டாலும் வரும் அறமும் ஆகிய இம்மூன்றுமேயாகும்.

பிரிந்த தலைவர் <u>வினைமுடித்து</u> விரைவில் வந்து தம்மைக் கூட வேண்டும்என்பதற்குத்தலைவியர்திருப்பரங்குன்றத்தில் விழா இயற்றினர் .(17, 42-46).இங்கு வினைமுடித்தல்என்னும் ஆணின் அறம் விளக்கப்படுகிறது ..

முடிவுரை:

தமிழர் வாழ்வியல்கோட்பாடுகளாவனஅறம்,பொருள் , இன்பம்,வீடு. இந்த நான்கில் ஒன்றைக்கொண்டுஅமைவதுநூலின்பயனாகும். அதில் தலைமை உடையது அறம் . 32 அறங்கள் இருப்பதாக திவாகர் நிகண்டு கூறுகிறது. இதில்அன்பு , மன்னன்கொடைச் சிறப்பு,பெரியோர் ஒழுகுதல்,இல்லறம்,நட்பு,போர் அறம்,பிற உயிர்களுக்கு இயங்குதல் எனும் மனிதநேயம்,வறியவர்களுக்கு இரங்குதல்பேசப்படுகிறது. உயிர் இரக்கம் என்பதே இதன் கருவாகும். இரவலர் வராதபோதும்தேடிச் சென்று அவர்களைத்தேரிலேஏற்றி அரண்மனைக்குஅழைத்து வந்து வரிசை செய்யும் வள்ளல் ஆடுகோட்பாட்டுசேரலாதன்என்று நச்செள்ளையர்பாராட்டுகிறார்.

எட்டுத்தொகையில்அறத்தொடு நிற்றல் என்ற முதன்மையான மரபு பேசப்படுகிறது.

தலைமக்களின்வாழ்வைஅறவழியில்நிலைப்படுத்தும்தோழிமுதலானோர்தலைவனும்தலைவியும் பிறர் அறியாதவாறுகாதல்கொண்டஉண்மையைஉரியவர்க்குஉரியவாறுஎடுத்துரைப்பதுஅறத்தொடு நிற்றல்ஆகும். மேலும் இத்தகைய **களவைக்கற்பாக்கும்அருஞ்செயலே–அறச்செயலே** இது. களவுக்காதலிலும்கூட அறத்தொடுநின்றனர் என்பதே இவ்வாய்வு.

**மேற்கோள்கள்:**


- தமிழ் இலக்கியவரலாறு-முனைவர் சு. ஆனந்தன் ,திருத்தியபதிப்பு(2018), கண்மணி பதிப்பகம்.
- தமிழ் மொழிஇலக்கியவரலாறு - டாக்டர் இராசமாணிக்கனார்(2014)
- தமிழ்நாடுஅரசுபாடநூல்மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் , பத்தாம்வகுப்பு(2019),
- http://www.tamilvu.org › html- Tamil Virtual University




Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599